**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள் திங்கள்கிழமை**

**O.S. 44/2023**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சிவராமகிருஷ்ணன்** | **தாலுக்கா** | : | **திருவாரூர்** |
| **த/பெ** | : | **சுப்ரமணியன்** | **கிராமம்** | : | **தேவர்கண்டநல்லூர்** |
| **ஜாதி** | : | **B.C.** | **தொழில்** | : | **விவசாயம்** |
| **சமயம்** | : | **இந்து** | **வயது** | : | **65** |

**முதல் விசாரணை**

நான் இந்த அசல் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(கடந்த 03.03.1997 ம் தேதியிட்ட திரௌபதிஅம்மன் ஆலய பரம்பரை அறங்காவலரிடம் நான் குத்தகைக்கு ஒப்புக் கொண்டு ஏற்படுத்திக் கொண்ட பகுதிக்கு அனுமதித்த கடிதம் (பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 29.05.2023 ம் தேதியிட்டு தேவர்கண்டநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று தாக்கல் செய்யப்படுகிறது. தாவா சர்வே நம்பருக்கான அ பதிவேட்டு நகல் மற்றும் புலப்படம் நகல் தாக்கல் செய்யப்படுகிறது. **(கடந்த 1407 ம் பசலி முதல் நாளது பசலி வரை வரி செலுத்தியதற்கான**

**ரசீதுகள் (எண்ணம் 15) (பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (தாவா சொத்திற்கு எனது பெயரில் ஏற்பட்ட வீட்டு வரி ரசீதுகள் அசல் (எண்ணம் 5) (பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (திரெளபதி அம்மன் கோயில் நிர்வாகம் சார்பில் எனது பெயருக்கு வழங்கப்பட்ட குத்தகை ரசீதுகள் (எண்ணம் 5) (பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.